(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 42.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 யூலை 19 புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசநாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு மனுவின் பிரதி எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன். "

**II**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களால் 2023 யூன் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம்."

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 யூலை 17 ஆம் திகதிய 2341/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தினை சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) கல்வி அமைச்சர்—

(i) 2020 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட திறன்கள் விருத்தி நிதியத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

திவுலபிட்டிய, ஹொரகஸ்முல்ல, ரஜமல் உயன, இல. 29/ஏ/101 இல் வதியும் திரு. ஐ.டி. சாமிந்தவினது 2023.05.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன சமர்ப்பித்தார்.

மேற்படி மனு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**4. ஊழல் எதிர்ப்பு சட்டமூலம்:** “சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“வாறான அத்தகைய தேதியில் நடைமுறைக்கு”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பதினெட்டு மாதங்களுக்குப்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் 30 ஆம் மற்றும் 31 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“தன்மை, சட்டவாட்சி மற்றும் நிலையுறுதி என்பவற்றை”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 21 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(4) ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களையும் பணிகளையும் அத்தகைய தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதில் அல்லது புரிவதில் ஆணைக்குழுவை பணிப்பதற்கு அல்லது மேற்பார்வை செய்வதற்கு சட்டத்தின்கீழ் உரித்துடையதாகவுள்ள ஒரு நீதிமன்றம் அல்லது நியாயசபை தவிர வேறு எவரேனும் ஆளிடமிருந்து வருகின்ற ஏதேனும் பணிக்கு அல்லது தலையீட்டுக்கு அமையாமல் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

(5) இப்பிரிவில் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக ஆணைக்குழுவின் தத்துவங்களை அல்ல பணிகளை பிரயோகிப்பதுடன் அல்லது புரிவதுடன் சட்ட அதிகாரமின்றி தலையிடுகின்ற அல்லது தலையிடுவதற்கு எத்தனிக்கின்ற ஒவ்வோராளும், யூரர்சபை இல்லாத விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பக்கப்படுவதன் மீது ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கக்கூடிய, ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற் தண்டனையினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டினாலும் மேல்நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அத்துடன் சேர்த்து மேலதிமாக-

(அ) அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு-

(i) மக்கள் தீர்ப்பொன்றில்;

(ii) குடியரசின் சனாதிபதியின் ஏதேனும் தேர்தலில்;

(iii) பாராளுமன்றத்தின் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவரின் ஏதேனும் தேர்தலில் தேருநர் ஒருவராக இருப்பதிலிருந்தும் வாக்களிப்பதிலிருந்தும் தகைமையற்றவர் ஆகவிருக்கலாம்; அல்லது

(ஆ) ஏதேனும் பகிரங்க பதவியை வகிப்பதிலிருந்தும் பகிரங்க அலுவராக தொழிலுக்கமர்த்தப்படுவதிலிருந்தும் தகமையற்றவராகவிருக்கலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 22 முதல் 29 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"4. (1) பின்வருவோருக்கிடையிலிருந்து அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்பட்டவர்களான மூன்று உறுப்பினர்களை ஆணைக் குழுவானது கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சட்டத்தில் நிபுணத்துவம் கொண்டவரும், மேன்மையடைந்தவரும் மற்றும் ஆகக்குறைந்தது இருபதாண்டுகளைக் கொண்ட அனுபவத்தை கொண்டுள்ளவருமான ஆளொருவர்; அத்துடன்

(ஆ) பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் நிபுணத்துவம் கொண்டவர்களும், மேன்மையடைந்தவர்களும் மற்றும் ஆகக் குறைந்தது இருபதாண்டுகளைக் கொண்ட அனுபவத்தை கொண்டுள்ளவர்களுமான இரண்டு ஆட்கள்:-

(i) குற்றப்புலனாய்வு மற்றும் சட்ட வலுவுறுத்தல்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 1 ஆம் மற்றும் 2 ஆம் வரிகளை நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"வின் தவிசாளராகவிருப்பதற்கு அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 21 ஆம் வரியை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "யினதான உடல், உள அல்லது வேறு உடற்றகுதியீனம் அல்லது இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான தகைமையீனம் என்ற ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் வாசகம்

9 ஆம் பக்கத்தில் 12 முதல் 16 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(2) பதவிக்காலப்பகுதி முடிவுறுவதன் காரணமாக ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரின் பதவியில் வெற்றிடமொன்று எழுகின்றவிடத்து, அத்தகைய உறுப்பினர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டு மூன்று மாதங்களினுள் அரசியலமைப்பு பேரவையினால் விதப்புரையின்மீது சனாதிபதியினால் அவரினிடத்தில் புதிய ஓர் உறுப்பினர் நியமிக்கப்படும் வரை அத்தகைய பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 முதல் 12 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

13 ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "13 ஆணைக்குழுவானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் வாசகம்

11 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரிக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் உடன்பாடின்மை ஏற்படும் பட்சத்தில் பெரும்பான்மையோரின் முடிவு மேலோங்கி நிற்றலும் வேண்டும்".

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16 ஆம் வாசகம்

12 ஆம் பக்கத்தில் 12 முதல் 19 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

17 ஆம் வாசகம்

12 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “தலைமையதிபதியொருவரை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கலந்தாலோசனையின் பின்னர் இச்சட்டத்தின்கீழ் அவருக்குக்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் வாசகம்

14 ஆம் பக்கத்தில் 6 முதல் 8 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “(இ) குற்றவியல் குற்றவழக்குகளை நடாத்துவதில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டு அனுபவத்தையேனும் கொண்டுள்ளவொரு சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்;”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

21 ஆம் வாசகம்

16 ஆம் பக்கத்தில் 9 முதல் 14 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பணிப்பாளர் தலைமையதிபதியை பதவி அகற்றுதல்

21. சனாதிபதியானவர் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள தகமையீனத்துக்கான ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏதுக்களின்மீது அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் நடத்தை ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதன் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துமிடத்து மற்றும் நேரடியாக அல்லது முறையாக நியமிக்கப்பட்டவொரு பிரதிநிதி மூலமாகக் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு கொடுத்த பின்னரும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய, பதவியிலிருந்து அகற்றலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

23 ஆம் வாசகம்

16 ஆம் பக்கத்தில் 30 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(3) சனாதிபதி அத்தகைய முடிபின் மூன்று மாதங்களினுள் புதிய பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது நியமித்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

24 ஆம் மற்றும் 25 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

26 ஆம் வாசகம்

20 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "சேவையின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய உறுப்பினரின் மற்றும் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 10 ஆம் மற்றும் 11 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "29 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக் கூடியவாறாக,".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

27 முதல் 30 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

31 ஆம் வாசகம்

23 ஆம் பக்கத்தில் 25 முதல் 31 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(2) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும் மற்றும் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட ஏதேனும் தவறு பற்றியவையுமான விசாரணைகளுக்காகவும், புலனாய்வுகளுக்காகவும் குற்றவழக்குகளுக்குமான எல்லாச் செலவுகளையும் திரட்டு நிதியத்தின் மீது அறவிடப்படுதல் வேண்டும்."; அத்துடன்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

24 ஆம் பக்கத்தில் 1 முதல் 4 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

25 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(6) நான்காம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின் கீழ் நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக ஏதேனும் பணம் பெறப்படுமிடத்து, கிடைக்கக்கூடியன வாகச் செய்யப்பட்ட நன்கொடை, கொடை அல்லது மானியக்கொடை என்பவற்றின் மூலம் மற்றும் நோக்கம் என்பன அத்தகைய பெறுவனவின் ஒரு மாதத்தினுள் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

32 ஆம் வாசகம்

25 ஆம் பக்கத்தில் 9 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "தும் நியமனம், பதவியுயர்வு, ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்குதல்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

25 ஆம் பக்கத்தில் 16 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பதவியுயர்வுகள், ஊதியங்கள், ஒழுக்காற்று கட்டுப்பாடு, பதவிநீக்குதல், நடத்தை";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

25 ஆம் பக்கத்தில் 19 முதல் 23 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 21 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

> '(4) කොමිෂන් සභාවේ සේවා නියුක්තිකයෙකුගේ සේවය අවසන් කළ විටකදී එම සේවා නියුක්තිකයා හට කාමරීක ආරවුල් පනත යටතේ කම්කරු විනිශ්චය සභාව වෙත අයැදුම්පතක් ඉදිරිපත් කළ හැක.' "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 21 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

> 'වීම්, පාරිශ්‍රමික, විනය පාලනය, දුක්ගැනවිලි සම්බන්ධයෙන් කටයුතු කිරීමේ කාර්ය පරිපාටිය, වයර්ාව සහ නිවාඩු ප්‍රදානය කිරීම' "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

33 ஆம் வாசகம்

25 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "மீது மத்திய அதிகாரியாகச் செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நோக்கத்துக்காக இச்சட்டத்தின்கீழ் மத்திய அதிகாரியின் தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிதலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 22 ஆம் பக்கத்தில் 3 ஆம் வரியை நீக்கிவிடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

34 முதல் 38 ஆம் வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

39 ஆம் வாசகம்

27 ஆம் பக்கத்தில் 1 ஆம் வரியை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "39. (1) ஆணைக்குழுவானது ஊழலை மிகக்குறைவாக்குவதற்கு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

27 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(2) ஆணைக்குழு ஊழலின் நிலைத்திருப்பு, காரணங்கள் மற்றும் பாரதூரத்தன்மை மற்றும் ஏற்படுத்தும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஊழலைத் தடுப்பதிலும் அதற்கு எதிராகப் போராடுவதிலும் சிவில் சமூகம், அரசசார்பற்ற மற்றும் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் முனைப்பான பங்குபற்றுகையை ஊக்குவித்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

40 ஆம் வாசகம்

28 ஆம் பக்கத்தில் 15 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "வகங்களினால் அமைந்தொழுகப்படவேண்டிய இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கும் அடியோடு ஒழிப்பதற்குமான";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 ஆம் பக்கத்தில் 16 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "பொது நிருவாகத்தில் அமைந்தொழுகப்பட வேண்டிய பகிரங்க துறையில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கும் மற்றும் அடியோடு ஒழிப்பதற்குமான நடத்தைக் கோவைகளை அறிமுகப்படுத்தலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(ஓ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான சேவையின் அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை

திறம்பட நிறைவேற்றுவதற்கு அவசியமென ஆணைக்குழு கருதக்கூடியவாறான உள்ளக பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்சி பெறுநர்களை ஆட்சேர்க்கலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

41 ஆம் வாசகம்

29 ஆம் பக்கத்தில் 2 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"கப்பட்ட ஏதேனும் தவறல்லாத இச்சட்டத்தின் பாகம் II இன் மற்றும் பாகம் III இன் அத்தியாயம் I மற்றும் அத்தியாயம் II என்பவற்றின் கீழான;" அத்துடன்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

29 ஆம் பக்கத்தில் 14 முதல் 18 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீகிகிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அத்தகைய தவறொன்று; அல்லது

(ஈ) இச்சட்டத்துக்கான அட்டவணை ஆ இல் குறித்துரைக்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 24 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை நீக்கிவிடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"41 (1) කොමිෂන් සභාව විසින්, මේ පනතේ විධිවිධාන යටතේ"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 25 ஆம் பக்கத்தில் 7 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(2) 43 වගන්තිය යටතේ පැමිණිල්ලක් සිදුකොට ඇති යම් පුද්ගලයෙකු විසින් ඒ උදෙසා ඉල්ලීමක් කරනු ලැබුවහොත්, කොමිෂන් සභාව විසින් එම පුද්ගලයා වෙත යම් ලිපි ගොනුවක් වසා දැමීම සම්බන්ධයෙන් සවිස්තරාත්මක සාධාරණීකරණයක් ලබාදිය යුතුය.'

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

42 ஆம் வாசகம்

30 ஆம் பக்கத்தில் 9 முதல் 11 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ளதா என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவா";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

30 ஆம் பக்கத்தில் 15 முதல் 18 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"என ஆணைக்குழு திருப்திப்படின், ஆணைக்குழுவானது புலனாய்வொன்றை நடாத்தும்படி பணிப்பாளர்"; அத்துடன்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

30 ஆம் பக்கத்தில் 21 மற்றும் 22 ஆம் வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"புரியப்பட்டுள்ளது என";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

32 ஆம் பக்கத்தில் 28 முதல் 34 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

34 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"எழுத்தில் பதியப்படுதல் வேண்டுமென்பெதுடன் ஆணைக்குழுவினால் முறைப்பாட்டைச் செய்தவரான ஆளுக்கு ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படுதலும் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

43 ஆம் வாசகம்

35 ஆம் பக்கத்தில் 8 ஆம் மற்றும் 9 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"யில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்று இடம்பெற்றிருக்கக்கூடும் அல்லது புரியப்பட்டதாகச்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 29 ஆம் பக்கத்தில் 27 மற்றும் 28 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “යටතේ යම් අල්ලස් හෝ දූෂණ ක්‍රියාවක් සිදුව තිබිය හැකි හෝ සිදු කරනු ලැබ ඇතැයි සැක කරනු ලැබිය හැකි හෝ සිදු කිරීමේ හැකියාවක් ඇති බව එකී මතය වන’ ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

44 ஆம் வாசகம்

35 ஆம் பக்கத்தில் 15 முதல் 21 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “செய்துள்ள ஆளொருவருக்கு 42 ஆம் பிரிவின்கீழ் நடாத்தப்பட்டவொரு புலனாய்வு தொடர்பாக எடுக்கப்பட்ட அடிப்படை நடவடிக்கைகள் பற்றிய நாளதுவரையாக்கமொன்று அத்தகைய புலனாய்வின் முன்னேற்றத்தைத் தடங்கல்செய்யாதவொரு முறையில் வழங்கப்படுதல் வேண்டும்.”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

35 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “(3) நாற்பத்து மூன்றாம் பிரிவின்கீழ் முறைப்பாடொன்றை செய்கின்ற எவரேனும் ஆளுக்கு, அத்தகைய ஆளின் சார்பில் செய்யப்பட்ட கோரிக்கையின்மேல், கோப்பொன்றின் மூடுகைபற்றி ஆணைக் குழுவினால் விபரமானவொரு நியாயப்படுத்துகையொன்று வழங்கப்படுதல் வேண்டும்.”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 30 ஆம் பக்கத்தில் 05 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “සපයු ලැබිය යුතුය. කොමිෂන් සභාව විසින් විමශර්නයට අදාළව ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

45 ஆம் வாசகம்

37 ஆம் பக்கத்தில் 22 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “பிரிவின் (2), (3), (4), (5) மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அதற்கு ஏற்புடையன”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

46 ஆம் வாசகம்

38 ஆம் பக்கத்தில் 12 முதல் 14 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “46. பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்குப் பிடியாணைப் பத்திரமொன்றை வழங்குதல் வேண்டும்; இது 45 ஆம்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

47 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

48 ஆம் வாசகம்

41 ஆம் பக்கத்தில் 25 முதல் 26 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “சூழ்நிலைகளைக் கவனத்துட்கொண்டும், உடனடியாக வழக்கில் நியாயாதிக்கங்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

49 ஆம் வாசகம்

42 ஆம் பக்கத்தில் 32 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “கைய எல்லா ஆட்களையும் விசாரணை செய்யலாம்:
>
> ஆயின், ஆணைக்குழு இப்பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் எவரேனும் ஆளின் விசாரணையைக் காணொளிப்பதிவு செய்யலாம்;”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

45 ஆம் பக்கத்தில் 9 முதல் 11 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

120 ஆம் வாசகம்

129 ஆம் பக்கத்தில் 18 முதல் 20 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> 'කරනු ලබන අතර, මහාධිකරණයක් ඉදිරියෙහි පවත්වනු ලබන ලඝු නඩු විභාගයකින් පසු වරදකරු කරනු ලැබූ විට රුපියල් මිලියනයක් නොඉක්මවන දඩයකට හෝ වසර පහක් නොඉක්මවන' "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

121 முதல் 124 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

125 ஆம் வாசகம்

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 132 ஆம் பக்கத்தில் 9 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> 'පසු වරදකරු කරනු ලැබූ විට රුපියල් මිලියනයක් නොඉක්මවන දඩයකට යටත්' "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியில் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> " දඩය රුපියල් පනස් දහස වෙනුවට රුපියල් ලක්ෂයක් විය යුතුය."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

126 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

127 ஆம் வாசகம்

167 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "ஏதேனும் தகவலை வெளிவிடுகின்ற; அல்லது
>
> (ங) இச்சட்டத்தின் கீழான தவறொன்றின் வரும் படிகளை அல்லது வரும்படிகளின் விளைவுகளின் ஏதேனும் பாகத்தினை, மறைத்து வைத்திருக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அத்தகைய வரும்படிகளை நேரடியாக அல்லது இடையீட்டாளர்களினூடாக நேரடியாகவல்லாமல் மறைத்து வைத்திருந்தாலும்சரி அல்லது வைத்திருந்தாலும்சரி அல்லது தனது சொந்த நன்மைக்காக அல்லது வேறொராளின் அல்லது உருவகமொன்றின் நன்மைக்காக மறைத்து வைத்திருக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற,";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

128 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

129 ஆம் வாசகம்

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 137 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

‘නඩු විභාගයකින් පසු වරදකරු කරනු ලැබූ විට රුපියල් මිලියනයක්’ ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியில் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“ දඩය රුපියල් පනස් දහස වෙනුවට රුපියල් ලක්ෂයක් විය යුතුය.”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

130 முதல் 135 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

136 ஆம் வாசகம்

171 ஆம் பக்கத்தில் 24 முதல் 32 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “(3) இச்சட்டத்தின் நியதிகளின்படி தவறொன்றாக அமைகின்ற செயலொன்றுடன் சேர்த்து அத்தகைய தவறு அதே நடவடிக்கையில் புரியப்படுமிடத்து, இச்சட்டத்துக்கான அட்டவணை அ மற்றும் அட்டவணை ஆ என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டதான தவறுகள், அந்தந்த சட்டவாக்கங்களில் அத்தகைய தவறுகளுக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அச்சட்டவாக்கங்களில் குறித்துரைக்கப்பட்டதான அதே தண்டனைகளைக் கொண்டிருத்தலும் வேண்டும்:
>
> ஆயின், எவ்வாறாயினும் அந்தந்த அச்சட்டவாக்கங்களில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறுக்கான தண்டனையானது, ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றை விட குறைவாகவுள்ளவிடத்து அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத மறியற்றண்டனைக் காலத்திற்கு குறைவாகவுள்ளவிடத்து அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் குறைவாக உள்ளவிடத்து, ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத மறியற்றண்டனைக் காலப்பகுதியொன்று அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டும் அத்தகைய தவறுகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.
>
> (4) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள எவற்றுக்கும் முரணாக எது எவ்வாறிருப்பினும், "ஆதனம்" என்னும் சொல் பருப்பொருள் சார்ந்த அல்லது பருப்பொருள் சாராத, அசையும்

அல்லது அசையாத, அருவமான அல்லது உருவமானதாயினுஞ்சரியான மற்றும் அத்தகைய சொத்துக்களின் உரித்து அல்லது அக்கறையை சான்றுப்படுத்துகின்ற சட்ட ஆவணங்கள் அல்லது சாதனங்களாயினுஞ்சரியான ஒவ்வொரு வகையினதான ஆதனங்கள் எனப் பொருள்படுதலும் அவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்.

(5) இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்துக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

137 முதல் 140 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

141 ஆம் வாசகம்

173 ஆம் பக்கத்தில் 1 முதல் 5 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"141. பாராதூரமான தன்மையையும் அரசின் மீதான தாக்கத்தையும் கவனத்துட்கொண்டு, தேசிய பொருளாதாரத்தின் நலன்கருதி, ஆளுகையின் நேர்மைத்தன்மை, வெளிப்படையான தன்மை மற்றும் வகைகூற வேண்டியமையையும் வளர்ப்பதற்கும் தனியார்துறையின் அலுவல்களில் நேர்மையை ஊக்குவிப்பதற்கும் இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்கு நீதிமன்றத்திலுள்ள வழக்கு நடவடிக்கைகள் அத்தகைய வேறு தொழிலிலுள்ள அவசரத்தன்மை பற்றிய விசேட சூழ்நிலைகள் அதனை தடுத்தல் தொடர்பில் நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டாலொழிய, நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் தொழிலுக்கு முன்னர் எடுக்கப்படுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

142 ஆம் வாசகம்

173 ஆம் பக்கத்தில் 10 நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அளவிலான அல்லது ஏதேனும் பாகம் அரசியலமைப்பின் 106 ஆம் உறுப்புரைக்கமைய, இரகசியமாக நடாத்தப்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

143 முதல் 148 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

149 ஆம் வாசகம்

177 ஆம் பக்கத்தில் 9 முதல் 15 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பிணை "149. (1) இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் பிணையளிக்கப்படக்கூடியதாகவும் பிணையளிக்க முடியாதவையாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்படுகின்றவர் அல்லது புரிந்துள்ளாரென சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் எவரேனும் ஆள், நீதிவான் முன்னர் தோன்றுமிடத்து, கொண்டுவரப்படுமிடத்து அல்லது நிறுத்தப்படுமிடத்து அல்லது சரணடையுமிடத்து, நீதிவான் 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பிணையை வழங்குதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய கண்டுபிடித்தலை உறுதிப்படுத்துகின்ற பணிப்பாளர் தலைமையதிபதியின் சான்றிதழொன்றுடன் எவரேனும் நீதிவான் முன்னர் அவாநிறைவொன்றை பரிந்து கேட்டல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது முனைகின்றமையை உள்ளடக்கி கொண்டுவரப்படுகின்ற அல்லது நிறுத்தப்படுகின்ற அல்லது சரணடைகின்றதான இச்சட்டத்தின் கீழான தவறொன்றை எவரேனும் ஆள் புரிந்துள்ளார் என கண்டறிந்தால், நீதிவான் விளக்கம் முடியும்வரை அத்தகைய ஆளை விளக்கமறியலில் வைத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், நீதிவான் விதிவிலக்கான சூழ்நிலைகளிலும் மற்றும் பதிவு செய்யப்படுவதற்கான காரணங்களுக்காகவும் அத்தகைய ஆளை விளக்கம் முடியும் முன்னர் எந்த நேரத்திலும் பிணையில் விடுதலை செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கட்டுக்காப்பிலுள்ள ஆளுக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளை தொடுப்பதற்கு உளக்கருதவில்லை என, ஆணைக்குழு நீதிவானுக்கு தெரிவிக்குமிடத்து, அத்தகைய உட்பிரிவின் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கைமுறையில், அத்தகைய ஆள் உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

177 ஆம் பக்கத்தில் 16 முதல் 25 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

150 முதல் 155 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

156 ஆம் வாசகம்

183 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை நீக்கிவிட்டு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

157 மற்றும் 158 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

159 ஆம் வாசகம்

184 ஆம் பக்கத்தில் 29 ஆம் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "அறிக்கைகள் அந்தரங்கத் தன்மை மற்றும் தனிப்பட்ட தரவு என்பவற்றை கவனத்திற்கொண்டு, ஆணைக்குழுவின் அலுவலக வலைத்தளம் ஊடாக";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

160 மற்றும் 161 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ப்பட்டன.

162 ஆம் வாசகம்

185 ஆம் பக்கத்தில் 26 முதல் 31 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(ஆ) அரசாங்கத்திற்கான இச்சட்டத்திலுள்ள குறிப்பீடு ஒவ்வொன்றும் நீதித்துறையில் தலையீட்டைச் செய்யாத முறையில் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பின் உறுப்புரை 111இ என்பதற்கு அமைந்ததாதலும் வேண்டும்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

186 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை உடனடுத்து பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "'இணைந்த தவறுகள்" என்பது இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறு தவிர்ந்த இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுகள் எனப் பொருள்படும்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

190 ஆம் பக்கத்தில் 21 ஆம் வரியை உடனடுத்து பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிபுணர்" என்பது (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் நிபுணரை உள்ளடக்குகின்றது";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

192 ஆம் பக்கத்தில் 1 ஆம் மற்றும் 2 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "ஆள்" என்பது இயற்கை ஆள் மற்றும் சட்ட ஆட்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்குகின்றது;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

192 ஆம் பக்கத்தில் 17 ஆம் மற்றும் 18 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அரசாங்கத் திணைக்களம், மாகாணசபை, உள்ளூரதிகாரசபை அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் என்பவற்றை உள்ளடக்குகின்றது:";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

193 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பகிரங்க உத்தியோகத்தர்" என்பது சனாதிபதியையும் பிரதம அமைச்சரையும்,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

195 ஆம் பக்கத்தில் 28 முதல் 31 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஆ) அந்தரங்க உடற்பகுதியை வெளிக்காட்டுதல் அல்லது தகவல் மற்றும் தொழிநுட்பவியல் தொடர்பாடலின் பயன்பாட்டின்மேல் அல்லது வேறு எவையேனும் வழிமுறைகளின் பயன்பாட்டின்மீது புரியப்படும் ஏதேனும் செயல் உட்பட்ட உடலுறவுக்கு இட்டுச் செல்லாத ஆனால், பாலியல் தன்மையினவான உடல்சார், சொல்சார் அல்லது சொல்சாராத நடத்தையாகவிருக்கும் அல்லது அமையும் ஏதேனும் செயல்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 154 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ලිංගික අල්ලසක් "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 160 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

' "ලිංගික අල්ලස" යන්නෙන්,'

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 154 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியில் "තුටුපඬුර" என்ற சொல்லுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு கௌரவ உதயன கிரிந்திகொட ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ඕනෑම ආකාරයක විද්‍යුත් මුදල් ඒකකයක් "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 154 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியில் "චංචල හෝ" என்ற சொல்லை உடனடுத்து பின்வருவதனை இடுமாறு கௌரவ உதயன கிரிந்திகொட மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ස්පර්ශ කළ නොහැකි හා අතථ්‍ය, "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 154 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியினை உடனடுத்து பின்வருவதனை இடுமாறு கௌரவ உதயன கிரிந்திகொட ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

" 'මේ ඡේදයේ කාර්ය සඳහා ශ්‍රී ලංකාව තුළ වලංගු මුදල් ලෙස යම් මුදල් පිළිගෙන ඇත්තේ ද නොමැත්තේ ද යන්න නොසලකා වලංගු මුදල් ලෙස පිළිගෙන ඇති ඩිජිටල් හෝ පරිගණක ආකෘතියකින් මුදල් ඇතුළත් වේ.' "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

163 ஆம் வாசகம்

200 ஆம் பக்கத்தில் 30 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"விசாரணைகளும் அல்லது புலனாய்வுகளும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

201 ஆம் பக்கத்தில் 2 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"விசாரணைகளும் அல்லது புலனாய்வுகளும் ஆக கருதப்படுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

202 ஆம் பக்கத்தில் 1 முதல் 15 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஏ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் பதவி வகிக்கும் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தொழிலின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளைவிட அனுகூலம் குறைந்தனவாக விராத, நியதிகளின்மீது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவின்

அலுவலர்களாக மற்றும் உத்தியோகத்தர்களாக இருப்பதற்கு இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழு வின் சேவையில் சேருவதற்கு அவர்கள் விருப்பத் தெரிவு கொண்டுள்ளார்களா என்பதனை ஆணைக்குழுவின் தாபனத்தின் மூன்று மாதங்களினுள் அறிவித்தல் வேண்டும்.

ஆயின்,

(i) ஆணைக்குழுவின் சேவையில் சேருவதற்கு விருப்புத் தெரிவிக்கின்ற ஒவ்வொரு அலுவலரும் உத்தியோகத்தரும் ஓய்வூதியம் அல்லது ஏனைய இளைப்பாற்று நன்மைகளை மட்டுமே கணக்கீடு செய்யும் நோக்கங்களுக்காக 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில், அவ்வாணைக் குழுவினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவில் அவருடைய சேவைக் காலப்பகுதி முடிவுறும் வரை, பகிரங்க அலுவலராக பதவியில் தொடர்ந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் பகிரங்க அலுவலரொருவராக அவரது முன்னைய சேவைக் காலப்பகுதிக்கு ஆணைக் குழுவிலான அவரது சேவைக்காலப்பகுதி சேர்க்கப்படும்போது இருபது ஆண்டுகளாக அல்லது அதற்கு மேற்பட்டதாக இருப்பின், ஆணைக்குழுவிலான அவரது சேவைக் காலப்பகுதி முடிவுறுவதன் மேல், ஓய்வுதியம் பற்றிய குறிப்புகள் உட்பட வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய அலுவலர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையனவாகக் கூடிய அவரின் ஓய்வூதியம் மற்றும் இளைப்பாற்று நன்மைகள் வழங்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(ii) ஆணைக்குழுவின் சேவையிலிருந்து தன்னிச்சையாகப் பதவிவிலகுவதற்கு விருப்புத் தெரிவிக்கின்ற ஒவ்வொரு அலுவலரும் உத்தியோகத்தரும் அமைச்சரினால் விதித்துரைக்கப்படவேண்டியவாறான தன்னிச்சையான ஆட்குறைப்புத் திட்டத்தின் நியதிகளின்படி செலுத்தப்படவேண்டியவாறான அத்தகைய நட்டஈட்டுக்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகள் உட்பட ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய அலுவலர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையனவாகக்கூடிய ஓய்வூதியம் மற்றும் இளைப்பாற்று நன்மைகளுக்கும் உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

202 ஆம் பக்கத்தில் 24 முதல் 27 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அத்தகைய எல்லாப் புலனாய்வுகளும் ஆணைக்குழுவின் பணிப்பின்மீது அவை தொடங்கப்பட்டு தொடரப்பட்ட புலனாய்வுகளின்போது ஆணைக்குழுவிற்கு கொடுத்துதவப்பட்ட எல்லாக் கூற்றுக்களும்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 164 ஆம் பக்கத்தில் 14 முதல் 25 வரையிலான நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

'1994 අංක 19 දරන පනත යටතේ පිහිටුවනු ලැබූ අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව විසින් හෝ ඊට එරෙහිව පවරනු ලැබූ

සහ මේ පනත ක්‍රියාත්මක වීම ආරම්භ වන දිනට පෙරාතුව ම වූ දිනයේ දී ආරම්භ කරන ලද සියලු විමශර්න හෝ අවසන් නොවී පවතින සියලු නඩු, නඩු පැවරීම්, විමශර්න සහ වෙනත් නීති කෘත්‍ය, මේ පනත යටතේ කොමිෂන් සභාව විසින් හෝ ඊට එරෙහිව පවරනු ලැබූ විමශර්න, නඩු, නඩු පැවරීම් සහ වෙනත් නීති කෘත්‍ය ලෙස සලකනු ලැබිය යුතු අතර, මේපනත යටතේ පවරනු ලැබ අඛණ්ඩව විනිශ්චයට ගනු ලැබූ විමශර්න, නඩු, නඩු පැවරීම් සහ වෙනත් නීති කෘත්‍ය වූවාක් සේ නියමිත දිනට පසු අඛණ්ඩව විනිශ්චයට ගනු ලැබිය යුතුය' ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

Hon. Chandima Weerakkody, Attorney at Law proposed an amendment to leave out line from 1 to 7 in page 147 of the Bill in English Language and substitute the following :—

'proceedings instituted or investigations commenced by or against the Commission under this Act and shall be continued after the appointed date as if they were inquiries, suits, actions, investigations and other legal proceedings instituted or investigations commenced and continued under this Act;' "

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

165 ஆம் வாசகம்

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 166 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

‘165. ක්‍රියාත්මක වන දිනය නොසලකා, මෙම පනතේ විධිවිධාන ශ්‍රී ලංකාව විසින් දූෂණයට එරෙහිව එක්සත් ජාතීන්ගේ සම්මුතිය අපරානුමත කළ දින ක්‍රියාත්ම වන පරිදි අතීතයේ සිට බලපාන අයුරින් අදාළ විය යුතුය.’ ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 166 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

‘මේ පනත යටතේ සිදුකරනු ලබන යම් වරදක් මගින් උපයාගත් මුදල් සහ අපරාධ කටයුතු මගින් උපයාගත් වෙනයම් මුදල් වේ නම් ඒවාද අයකර ගැනීමට අදාළ කරුණු සම්බන්ධයෙන් කොමිෂන් සභාව විමසමින් අමාත්‍යවරයා විසින් රෙගුලාසි සෑදිය යුතුය.’ ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

164 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அட்டவணை அ

“அட்டவணை சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அட்டவணை ஆ

“அட்டவணை சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முன்னுரை

முன்னுரைக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “ஊழலுக் கெதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின் குறித்தசில ஏற்பாடுகளுக்கும் மற்றும் வேறு சர்வதேச ரீதியில் ஏற்றங்கீரிக்கப்பட்ட நெறிகள், நியமங்கள் அத்துடன் மிகச்சிறந்த செயல்முறைகள் என்பற்றுக்கும் பயன்கொடுப்பதற்கும், இலஞ்சம், ஊழல்பற்றிய சார்த்துதல்களை மற்றும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தலுடன் தொடர்புபட்ட தவறுகளை மற்றும் இணைந்த தவறுகளைக் கண்டுபிடித்து புலனாய்வு செய்வதற்கும், இலஞ்சம், ஊழல்பற்றிய தவறுகளுக்காகவும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தலுடன் தொடர்புபட்ட தவறுகளுக்காகவும்” என்னும் சொற்களை இடுக.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“முன்னுரை திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முன்னுரை

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**5. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் :**

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 53 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

54 ஆம் வாசகம்

72 ஆம் பக்கத்தில் 22 முதல் 25 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(2) பாதுகாப்புப் பிரிவின் பொலிசு அலுவலர்கள் அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட பெயர்நியமனத்தின்மீது, அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்படுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

73 ஆம் பக்கத்தில் 2 முதல் 4 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "ஒருப்பாட்டுடன், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினதும் மற்றும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினதும் மேற்பார்வையின்கீழ் செயற்பட வேண்டிய சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் என்னும் பதவிவரிசைக்குக் குறையாதவரும் பொருத்தமான முறையில் தகைமைபெற்றவருமான பொலிசு அலுவலரொருவரைப் பாதுகாப்புப் பிரிவின்" ; அத்துடன்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

73 ஆம் பக்கத்தில் 8 முதல் 12 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "பதவிநீக்கம் என்பன தொடர்பான எல்லாக் கருமங்களும், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் விதப்புரையின்மீது அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கருமத்தின்மீது விதப்புரைகளைச் செய்கையில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அதிகாரசபையின் கருத்துக்களை நாடலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

55 முதல் 90 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

91 ஆம் வாசகம்

107 ஆம் பக்கத்தில் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் ஊறுக்காக அவர்களுக்கான நட்டஈடு;";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

92 முதல் 99 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

100 ஆம் வாசகம்

111 ஆம் பக்கத்தில் 25 முதல் 29 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

| | |
|---|---|
| “அதிகாரசபையானது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்டநிறுவனமொன்றாகக் கருதப்படுதல் | “100. அதிகாரசபையானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.”;”; |

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

101 முதல் 103 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

104 ஆம் வாசகம்

117 ஆம் பக்கத்தில் 9 முதல் 11 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(இ) 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தினால்”; அத்துடன்

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

105 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முதலாம் அட்டவணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் அட்டவணை

129 ஆம் பக்கத்தில் 43 ஆம் விடயத்தை அடுத்துப் பின்வருவதனை இடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

| | | | |
|---|---|---|---|
| 44 | 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம் | 93 | உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகள், நீதிமுறை அலுவலர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலான இலஞ்சம் |
| 45 | | 94 | பகிரங்க உத்தியோகத்தர்களை நேர்காண்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் அவா நிறைவை ஏற்றுக்கொள்ளல் |
| 46 | | 96 | பொலிசு உத்தியோகத்தர்கள், சமாதான அலுவலர்கள் மற்றும் வேறு பகிரங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான இலஞ்சம் |
| 47 | | 97 | ஒப்பந்தங்கள் தொடர்பாக உதவி வழங்குதல் அல்லது செல்வாக்கைப் பயன்படுத்துவ தற்கான இலஞ்சம் |
| 48 | | 98 | கேள்விப்பத்திரங்களை மீளப் பெறுவதனைச் செய்விப்பதற்கான இலஞ்சம் |
| 49 | | 99 | அரசாங்க அலுவல் தொடர்பிலான இலஞ்சம் |
| 50 | | 100 | உரிமைக் கோரிக்கைகளின் கொடுப்பனவு, நியமனங்கள், தொழில்கள், மானியக்கொடைகள், குத்தகைகள் மற்றும் வேறு நன்மைகள் தொடர்பிலான இலஞ்சம் |
| 51 | | 101 | அரசாங்கத்துடன் கையாளுகை களைக் கொண்டுள்ள ஆட்களினால் பகிரங்க உத்தியோகத்தர் களுக்கான இலஞ்சம் |
| 52 | | 102 | உள்ளூரதிகார சபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளும் குழுவின் உறுப்பினர் ஒருவர் தொடர்பிலான இலஞ்சமும் உள்ளூரதிகார சபை யொன்றின் அல்லது அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் உத்தியோகத்தர் தொடர்பிலான இலஞ்சமும் |

| | | | |
|---|---|---|---|
| 53 | | 103 | உள்ளூரதிகார சபையொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் ஆளும் குழுவொன்றின் உறுப்பினரின் வாக்கின் மீது செல்வாக்குச் செலுத் துவதற்கு அச்சுறுத்தல்கள் அல்லது மோசடியைப் பயன்படுத்தல் |
| 54 | | 104 | செல்வாக்குச் செலுத்துதல் |
| 55 | | 108 | விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான தவறுகள் |
| 56 | | 111 | ஊழல் |
| 57 | | 125 | நீதிக்கு முட்டுக்கட்டையிடுதல் |
| 58 | **(218 ஆம் அத்தியாயமான நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டம்** | 54அ | அபாயகரமான அவுடதங்களை உற்பத்தி செய்தல் வியாபாரஞ் செய்தல், இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் |
| 59 | | 54ஆ | 5 4அ என்னும் பிரிவின் கீழான தவறொன்றின் புரிகைக்கு உடந்தையளித்தல் அல்லது அத்தவறைப் புரிவதற்கு எத்தனித்தல் |
| 60 | **1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்** | 2 | குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்கு அல்லது சாட்சிக்கு இறப்பு மற்றும் முதலியவற்றையும், குற்றமுறையான அச்சுறுத்தலையும் விளைவித்தல், அரசாங்க ஆதனத்திற்கு சொத்தழிவை ஏற்படுத்துதல் முதலியனவும் |
| 61 | | 3 | இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையாயிருத்தல், சதி செய்தல், எத்தனித்தல் அல்லது தூண்டுதல் |
| 62 | | 12 | இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடையீட்டு அல்லது மட்டுப்பாட்டுக் கட்டளையை மீறுகின்றமை அல்லது |

| | | | |
|---|---|---|---|
| 63 | | 24 | இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கலம் தொடர்பில் அல்லது வானூர்தி தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்ற செயலொன்றைப் புரிதல் |

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"அட்டவணை திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**6. இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்று தலைமைதாங்கும் உறுப்பினரால் 53 (3) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம் சபாநாயகரால், பி.ப. 1.51 மணிக்கு 2023 யூலை 20 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.